## சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

O.S.No. 98/2012
DW5 : **திருமதி. கோகிலா க/பெ. பாலன்**
**18.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | தொழில் | : |
| தந்தைபெயர் | : | கிராமம் | : |
| வயது | : | வட்டம் | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாகல்மேட்டில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் 9 ஆம் பிரதிவாதி. நான் பிரதிவாதி தரப்பு சாட்சி 5. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும. என் நிரூபாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

1. 06-03-2024 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.33** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**தாவா தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். என் திருமணத்தை என் வீட்டில் ஏற்றுக் கொண்டார்களா என்றால் ஏற்றுக் கொண்டார்கள். மறுபடியும் வீட்டில் என்னை சேர்த்து வைத்ததது யார் என்றால் எங்கள் ஊரைச்சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சேர்த்து வைத்தார். நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிப்பது என் உடன் பிறந்தவர்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்களும் இந்த வழக்கில் தரப்பினராக உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் வழக்கறிஞர் கூறி தெரியும்.

இன்று முதன் முதலாக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்தும், சொத்தின் விவரம் குறித்து தெரியாது என்றாலும் 2, 4 பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்திற்கு இன்று வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி ஆசிர்வாதம் மூலமாக நான் வழக்கறிஞரை சந்தித்து வழக்கின் தன்மை குறித்து தெரிந்து கொண்டேன். என் தந்தைக்கு எவ்வளவு சொத்திருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் நிறைய சொத்துக்களை விற்றுவிட்டார்கள். தற்போது மீதமுள்ள சொத்துக்கள் மட்டும் உள்ளது. 2006 ல் நிறைய சொத்துக்களில் என்னுடன் பிறந்தவர்களும், பெரியப்பாவின் 2 ஆவது மனைவியின் வாரிசுகளும் பாகப்பிரிவினை செய்துகொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு அவர்கள் பாகப்பிரிவினை செய்யும்போது நான் என் பாகத்தை கேட்கவில்லையா என்றால் என்னுடைய பாகத்தை என்னுடைய தம்பி லட்சா ரவியிடம் விட்டு வைத்திருந்தேன். 15 சென்ட் பாகப்பிரிவினை செய்யும் போது எனக்கு ஒதுக்கியதாக பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அண்ணன் தம்பி 3 பேரும் பிரித்துக் கொண்டார்கள் எனக்கும் தனியாக சொத்து கொடுத்தார்கள். நான் பாகப்பிரிவினை பத்திரத்தில் கையொப்பமிடவில்லை. எனக்கு என்று சொன்ன பாகம் எவ்வளவு கொடுத்துள்ளார்கள் என்றால் 15 சென்ட் கொடுத்துள்ளார்கள். 15 சென்ட் என்னுடைய பாகம் ஆகும். என் தந்தைக்கு எவ்வளவு சொத்து பாகமாக வந்தது என்றால் 5 ஏக்கர் நிலம் பாகமாக வந்தது. அந்த 5 ஏக்கரை 4 பிள்ளைகள் பிரித்துக்கொண்டோம். 3 மகன்கள் 1 மகள் நாங்கள் பிரித்துக்கொண்டோம். நாங்களாகவே பேசி பிரித்துக்கொண்டோம். அதில் பெரியவர்கள் பேசி தலையிடவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கம் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததாக கூறியுள்ளேன் எப்போது நடந்தது என்றால் அவர்களுக்கு இடையே யாரும் மத்தியஸ்தம் செய்யமாட்டார்கள். சுமார் 20 அல்லது 25 வருடத்திற்கு முன்பதாக பிரித்துக் கொண்டார்கள். வேணு எப்போது இறந்தார் என்றால் 25 வருடம் முன்பு இறந்துவிட்டார். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் அதற்கு பிறகு இறந்தார். எப்போது இறந்தார் என்று தெரியாது. என் தாத்தா எப்போது இறந்தார் என்று தெரியாது. என் அப்பாவும், என்

பெரியப்பாவும், இறந்துபோன என் சித்தப்பாவும் சேர்ந்து இத்தனை சொத்துக்களை வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அதை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து முழுவதும் பூர்வீக சொத்து என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் எங்கள் ஊரில் உள்ள மற்றொரு குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். கிருஷ்ணவேணியம்மாவின் கணவர் தான் வழக்கை நடத்திக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். கிருஷ்ணவேணியம்மாவிற்கும், அவரது சகோதரிக்கும் நீதிமன்றத்தில் உள்ள வழக்கை நடத்தியதற்காக கொடுத்தது என்றால் சரியல்ல. பாகமாக கொடுத்தது அல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 உயில் பத்திரத்தில் பாகமாக கொடுத்ததாக இல்லை என்றால் சரியல்ல. என் பெரியம்மா சிவகாமியை பற்றி என் பிரமாண வாக்குமூலத்தில் கூறிய சங்கதிகளை எதிர்உரையில் கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சரோஜா என் பெரியப்பாவின் 2ஆவது மனைவி என்றால் சரிதான். சிவகாமி உயிருடன் இருக்கும்போதே என் பெரியப்பா 2ஆவது திருமணம் செய்து கொண்டார் என்றால் சிவகாமி வேறுஒருவருடன் திருமணம் செய்து கொண்டார். என் பிரமாண வாக்குமூலத்தில் கேள்விபட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு குறித்து நேரடியதாக தெரியாது என்றாலும் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு என் காதல் திருமணத்தினால் என் அண்ணன் தம்பியுடம் பேச்சு வார்த்தையில்லாமல் இருந்தது என்றாலும் தற்போது இந்த வழக்கிற்காக பேச்சு வார்த்தை ஏற்பட்டு நான் நீதிமன்றத்திற்கு வந்து அவர்கள் சொல்வதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகளின் திருமணத்திற்கு என் அண்ணன் தம்பிகள் வரவில்லை என்றாலும் அந்த 15 சென்ட் நிலத்தை நான் என் தம்பியிடம் நிறுத்தி வைத்திருந்தேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.